egistered as a News Paper    பக்கங்கள் 02    விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

விசேட பதிப்பு

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2024    தை 04    (17-01-1993)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை ௲34

## தமிழீழத்திற்காகவே எங்களை நாம் அர்ப்பணிக்கின்றோம்


- தளபதி கிட்டு

"நாங்கள் போராளிகள் மத்தியில் உயர்வு தாழ்வு காட்டக் கூடாதென்ற உயர்ந்த இலட்சியத்தின் அடிப்படையிலேயே சகல வழிகளிலும் இயங்கி வருகின்றோம். அதன் அடிப்படையில்தான் போராட்ட உத்திகளையும் கையாண்டு வருகின்றோம். இதனால்தான் நாம் சிலவேளைகளில் பெருந்தலைவர்களையே இழக்கவேண்டி நேரிடுகிறது எனினும் எமது போராட்டம் வெற்றிப்பாதையில் சென்று கொண்டிருப்பதற்கும் இப்போராட்ட முறைதான் காரணம் என நாம் எண்ணுகிறோம். 384 போராளிகளை இன்றுவரை நாம் இழந்துள்ள போதும் அவர்களில் ஒருவரைக்கூட அநியாயமாகப் பறிகொடுத்து விட்டதாக நாம் கவலை கொள்ளவில்லை நாங்கள் சிறந்த போராளிகளே [மறுபக்கம் பார்க்க]

# கடலில் காவியமான தளபதி கேணல் கிட்டு;

# கப்பலைத் தகர்த்து வேங்கைகள் வீரச்சாவு

## இந்தியாவின் சதி வலையில் சிக்கிய 10 விடுதலைப் புலிகள் வீரமரணம்



(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதியும், மத்தியகுழு உறுப்பினருமாகிய கேணல் கிட்டு நேற்றுக்காலை வீரச்சாவை அணைத்துக்கொண்டார். அவருடன் லெப்டினன்ட் கேணல் குட்டிசிறி உட்பட மேலும் ஒன்பது புலி வீரர்கள் வீரச்சாவு எய்தினர்.

கடந்த புதன்கிழமை இரவு 10 மணியளவில் சர்வதேச கடற்பரப்பில் வைத்து இந்தியக் கடற்படையால் தடுக்கப்பட்ட புலிகளின் கப்பல் சென்னைக்கு சமீபமாக 12 மைல தூரம்வரை பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டது. அங்கு புலி வீரர்களை சரணடையுமாறு இந்திய கடற்படையினர் ஆயுத முனையில் நிர்ப்பந்தித்தனர். இந்தியாவிடம் சரணடைய மறுத்த தளபதி கிட்டுவும் ஏனைய போராளிகளும் கப்பலைத் தகர்த்து தற்கொலை செய்துகொண்டனர். இவ்வாறு கேணல் கிட்டு உட்பட பத்துப் போராளிகள் வீரச்சாவு அடைந்தமை தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகம் விடுத்த அதிகாரபூர்வமான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்தச் சம்வம் பற்றி தமி... படையிடம் சரணடைய மறு...
...மீழ விடுதலைப் புலிகளின் ...த்த கேணல் கிட்டுவும்

[இந்தச் சம்பவம் பற்றி தமி]ழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் விடுத்துள்ள அதிகாரபூர்வமான அறிக்கை வருமாறு :

தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதியும் மத்திய குழு உறுப்பினருமாகிய கேணல் கிட்டு நேற்றுக் காலை வீரச்சாவை அணைத்துக்கொண்டார். அவருடன் லெப்டினன்ட் கேணல் குட்டிச் சிறி உட்பட மேலும் ஒன்பது புலிவீரர்கள் வீரச்சாவு எய்தினர் இந்திய கடற்[படையிடம் சரணடைய மறு]த்து கேணல் கிட்டுவும் ஏனைய போராளிகளும் தம்மைத் தாமே அழித்துக் கொண்டனர்.

இந்திய கடல் எல்லையில் இருந்து 450 மைல்களுக்கு அப்பால், சர்வதேச கடற்பரப்பில் கேணல் கிட்டுவும் மற்றைய போராளிகளும் தமிழீழம் நோக்கி வந்துகொண்டிருந்த கப்பலை இந்திய கடற்படை 13 ஆம் திகதி புதன் கிழமை 10·00 மணிக்கு வழிமறித்தது. சர்வதேசக்கடலில் இடைமறிப்பது சட்டவிரோதமானது என கேணல் கிட்டு ஆட்சேபம் தெரிவித்தார். இந்த ஆட்சேபத்தை பொருட்படுத்தாது இந்திய கடற்படையினர் புலிகளின் கப்பலை பலவந்தமாக இந்தியா நோக்கி கொண்டு சென்றனா. இதனையடுத்து புலிகளின் சர்வதேச தலைமையகம் இந்திய அரசின் இந்தச்சட்ட விரோதமான அத்துமீறில் செயலை கண்டித்ததுடன் இவ்விவகாரத்தை சர்வதேச செய்திநிறுவனங்கள் மூலம் உலகிற்கு பகிரங்கப்படுத்தியது ஆனால் இச்சம்பவம் தொடர்பாக இந்திய அரசு எதுவும் கூறாமல் மௌனம் சாதித்தது.

இரண்டு நாள் கடல் பயணத்தை அடுத்து 16-ம் திகதி சனிக்கிழமை காலை, இந்திய கடல் எல்லைக்குள் புலிகளின் கப்பல் கொண்டுவரப்பட்டது. சென்னைத் துறைமுகத்திலிருந்து 12 மைல் தொலைவில் வைத்து புலிகளின் கப்பல் நிறுத்தப்பட்டது அதன் பின் கேணல் கிட்டுவையும் ஏனைய போராளிகளையும் சரணடையுமாறு இந்திய கடற்படை நிர்ப்பந்தித்தது. இதனைத் தொடர்ந்து கப்பலை சுற்றி வளைத்து, இந்திய கடற்படையினர் புலிகளை கைதுசெய்யும் நடவடிக்கையில் இறங்க முற்பட்டனர். அப்பொழுது இந்திய கடற்படையினரிடம் சரணடைய விரும்பாத கேணல் கிட்டும் ஏனைய புலி வீரர்களும் கப்பலைத் தகர்த்து தம்மைத்தாமே அழித்து வீரச்சாவை தழுவிக்கொண்டனர்.

ஐரோப்பிய சமூகநாடுகளின்

[ 2 ஆம் பக்கம் பார்க்க ]



லெப்டினன்ட் கேணல் குட்டிசிறி

# சர்வதேச அரசியல் அரங்கில் இந்தியாவின் புரளி அம்பலம்

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கிட்டு பயணம் செய்த கப்பல் கைப்பற்றப்பட்டமை அக்கப்பல் அழிக்கப்பட்டமை தொடர்பாகவும், அதில் பயணம் செய்த திரு. கிட்டு மரணமடைய நேர்ந்தது தொடர்பாகவும் இந்தியா வெளியிடும் தகவல்கள் மூன்னுக்கு பின் முரணாகவும், யதார்த்தத்துக்குப் புறம்பானவையாகவும் இருப்பதாகவும் சர்வதேச அரசியல் அரங்கில் கருதப்படுவதோடு, இவ்விவகாரத்தில் இந்தியாவின் கூற்றுக்கள் ஏற்புடையவையாக இல்லை எனவும் கருதப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தளபதி கிட்டு விவகாரம் தொடர்பாக நேற்றுக் காலை தகவல் வெளியிட்ட ஓர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கிட்டு கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தமிழக புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். இதேவேளை தரு. கிட்டு சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

ஆனால், நேற்று மாலை தளபதி கிட்டுவைத் தாம் கைது செய்யவில்லை என்றும், அவர் எரியும் கப்பலிலேயே இருந்தார் என்றும் இந்திய இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த முரண்பாடான அறிக்கைகள் இந்தியாவின் ஏமாற்று நடவடிக்கையைக் காட்டுவதாகவே அவதானிகள் கருதுகின்றார்கள். மேலும் சர்வதேச கடற்பரப்பில் வைத்து

( 2 ஆம் பக்கம் பார்க்க )

## இந்தியாவின் சதிக்கு பலியான வேங்கைகள்

**கேணல் கிட்டு**
[சதாசிவம் கிருஸ்ணகுமார்
வல்வெட்டித்துறை]

**லெப். கேணல் குட்டிசிறி**
[இராஜையா சிறிகணேசன்
சுதுமலை வடக்கு, மானிப்பாய்]

**மேஜர் வேலன் (மலரவன்)**
[சுந்தரலிங்கம் சுந்தரவேல்
வியாபாரிமூலை, பருத்தித்துறை]

**கடற்புலி கப்டன் ஜீவா**
[நடராசா மார்க்ஜெயராஜ்
கொய்யாத்தோட்ட ஒழுங்கை, பாசையூர், யாழ்.]

**கடற்புலி கப்டன் குணசீலன் (குணராஜ்)**
[சேகரன்குருஸ் மைக்கல் ஜீவா
2-ம் குறுக்குத்தெரு, உதயபுரம், மணியந்தோட்டம்]


**கடற்புலி கப்டன் றொசான்**
[இரத்தினசிங்கம் அருணராசா
அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்]

**கடற்புலி கப்டன் நாயகன்**
[சிவலிங்கம் கேசவன்
பொலிகண்டி, வல்வெட்டித்துறை]

**கடற்புலி லெப். தூயவன்**
[மகாலிங்கம் ஜெயலிங்கம்
கண்டிவீதி, யாழ்ப்பாணம்.]

**கடற்புலி லெப் நல்லவன்**
[வருணசுந்தரம் ரமேஸ்
மணியந்தோட்டம், கொழும்புத்துறை, யாழ்]

**கடற்புலி லெப். அமுதன்**
[அலோசியஸ் ஜன்சன்
2-ம் குறுக்குத்தெரு, நாவாந்துறை வடக்கு, யாழ்]



## சாவிற்கு நாம் தயார்; ஆன்மபலம் எம்மிடமுண்டு

- தளபதி கிட்டு

"அவர்களிடம் அதிக ஆட்கள், சிறந்த உபகரணம் ஆயுதங்கள், அப்படி இப்படி என்றெல்லாம் உண்டு தான். ஆனால் எம்மிடம் ஆன்மபலமும் வீரமும் உள்ளன. சாவுக்கு நாம் தயார் அவர்கள் சாக ஆயத்தமானவர்கள் அல்லர் வெளியே அவர்கள் புறப்பட்டு வருவதில்லை. ஏன்? எம்மில் கடைசி மனிதன் உயிருடன் இருக்கும் வரை நாம் போர் புரிவோம். அவர்களுக்கு பாரிய இழப்புகள் நேரிடும் அவர்கள் அதனை நன்கு அறிவார்கள்"

(நவம்பர் 86 புரண்டலைன் பேட்டி)

# வேங்கைகளின் இழப்பு கேட்டு யாழ். குடாநாடு சோகமயம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னாள் தளபதியும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய பிரமுகருமான கிட்டுவும் அவருடன் ஒன்பது வேங்கைளும் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட செய்தியால் குடாநாடு முழுவதும் சோகமயமாகக் காட்சியளிக்கிறது.

பெருவீதிகள் மட்டுமன்றி ஒழுங்கைகள் மற்றும் குச்சொழுங்கைகள் எங்கும் வாழை மரங்கள் கட்டப்பட்டிருப்பதோடு தோரணங்களும் தொங்கவிடப்பட்டுள்ளது.

ஒவ்வொருவர் முகத்திலும் சோகத்தின் சுவடுகள் அப்பிப் போயுள்ளது தமது சொந்த சகோதரனை உற்ற ஓர் உறவினரை இழந்துவிட்டது போன்ற சோகம் எங்கும் பரவியுள்ளது. கறுப்புக் கொடிகளும் எல்லா இடங்களிலும் பறக்கவிடப்பட்டிருக்கிறன. முக்கிய வீதிகளிலும் சந்திகளிலும் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டன.


இத் துயரச் செய்தி கேட்டதும் தனியார் ரியூட்டறிகள் உடனடியாக மூடப்பட்டதுடன், சந்தைகள் மற்றும் கடைத்தெருக்கள் போன்ற இடங்களிலும் சனநடமாட்டம் குறைவடைந்தது எங்கும் தளபதியினதும், வேங்கைகளினதும் வீரச்சாவு குறித்த செய்திகளே பேசப்பட்டதுடன் ஒவ்வொருவரும்

( 2 ஆம் பக்கம் பார்க்க )


## போராளியாக மரணிக்கவே விரும்புகின்றேன்

"எமது இயக்கத்தில் கட்டுப்பாடு உள்ளது. எமது மக்களின் விடுதலைக்காக நான் ஓர் போராளியாக இருந்து போராளியாக மரணிக்கவே விரும்புகின்றேன்" (தளபதி-கிட்டு)


# இந்திய சதியில் சிக்கி
# வங்கக் கடலில் காவியமான வேங்கைகள்




மேஜர்
**வேலன் (மலரவன்)**



கடற்புலி கப்டன்
**ஜீவா**




கடற்புலி கப்டன்
**றொசான்**




கடற்புலி கப்டன்
**குணசீலன் (குணராஜ்)**











கடற்புலி கப்டன்
**நாயகன்**



கடற்புலி லெப்டினன்ட்
**அமுதன்**



கடற்புலி லெப்டினன்ட்
**நல்லவன்**



கடற்புலி லெப்டினன்ட்
**தூயவன்**

## கடலில்

மத்தியத்துவத்துடன் தமிழீழ தேசிய பிரச்சினைக்கு சமாதான வழிமூலம் தீர்வு காணும் ஒரு சமரசத் திட்டத்துடன் கேணல் கிட்டு தமிழீழம் நோக்கி வந்து கொண்டிருந்தார். இந்த சமாதானத் திட்டம் பற்றி தலைவர் பிரபாகரனுடன் கலந்தாலோசிக்கும் நோக்குடனேயே அவர் தனது பயணத்தைமேற்கொண்டார். இந்த சமரசத் திட்டம் பற்றியும் அதில் ஐரோப்பிய நாடுகளின் பங்கு பற்றியும் எமது சர்வதேச தலைமையக பேச்சாளர் பல்வேறு வழிகளில் இந்திய அரசுக்கு தெரிவித்திருந்த போதும் இந்தியா அதற்கு செவிசாய்க்கவில்லை. தமிழர் பிரச்சினைக்கு சமாதான வழிமூலம் தீர்வுகாணும் இந்த சர்வதேச முயற்சிக்கு முட்டுக் கட்டையாக இருக்க வேண்டாமென தமிழ் நாட்டு தலைவர்கள் விடுத்த வேண்டுகோளையும் இந்திய அரசு நிராகரித்தது. சர்வதேசக் கடலில் தமது கப்பலை வழிமறிப்பது சட்ட விரோதமானது என்றும், தம்மைக் கைது செய்ய முற்பட்டால் தம்மைத் தாமே அழித்துக் கொள்ளப் போவதாகவும் கேணல் கிட்டு பல தடவைகள் எச்சரிக்கை விடுத்ததையும் இந்திய அரசு பொருட்படுத்தவில்லை.

சர்வதேச கடற் பரப்பில் வைத்து புலிகளின் கப்பல் வழி மறிக்கப்பட்டதும், சர்வதேச சமாதான முயற்சிக்கான பயணம் என்பதை அறிந்திருந்தும் இந்திய அரசு மேற்கொண்ட இந்த அநீதியான நடவடிக்கை ஒரு உண்மையை தெளிவுபடுத்துகிறது. அதாவது புலிகளின் தளபதிகளை அழித்து தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதே இந்தியாவின் நாசகாரத் திட்டமாகும். இந்த நாசகார சதிவேலைக்கு எமது மூத்த தளபதி கிட்டுவும் ஏனைய போராளிகளும் பலியாகியுள்ளனர். இந்த அநீதியான செயலை அமைதியும் சமாதானமும் விரும்பும் சர்வதேச உலகம் கண்டிக்க வேண்டும்.

இந்த சம்பவத்தில் வீரச்சாவை தழுவிய கேணல் கிட்டு, லெப் கேணல் குட்டிசிறீ, மேஜர் வேலன், கப்டன் குணசீலன், கப்டன் ஜீவா, கப்டன் ரொசான், கப்டன் நாயகன், லெப். அமுதன், லெப். நல்லவன், லெப். தூயவன் ஆகியோருக்கு விடுதலைப்புலிகள் இயக்கம் தனது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறது.

### தமிழீழத்திற்காகவே

தரை சிறந்த பேச்சாளர்களோ வாய்வீச்சு வீரர்களோ அல்ல. தமிழீழம் என்ற இலட்சியமே எமது முடிவான முடிவு இதற்காகவே எம்மையே நாம் அர்ப்பணித்துள்ளோம்''
[மேஜர் அல்பேட்டின் சிலை திறப்புவிழாவில் தளபதி கிட்டு. டிசம்பர், 1986]

### வேங்கைளின்

சோகம் ததும்பும் நெஞ்சத்தினராய் காணப்பட்டோர் நாடு முழுவதும் சோககீதம் எதிரொலித்தது

இத்துயரச் செய்தியைத் தாங்கிவந்த பத்திரிகைகளுக்குப் பலதத தட்டுப்பாடு நிலவியது.

# ஆசிக்குளத் தாக்குதல் விடுதலைப்புலிகள் ஊர்ஜிதம்

## 7 பொலிஸார் பலி; ஆயுதங்களும் மீட்பு

வவுனியா ஆசிக்குளம் பகுதியில் கடந்தபுதன்கிழமை இரவு 8 00 மணியளவில் பொலிஸ் காவல் நிலையம் மீது நடாத்திய திடீர் அதிரடித் தாக்குதலில் ஏழு பொலிசார் கொல்லப்பட்டதை விடுதலைப் புலிகள் ஊர்ஜிதம்செய்துள்ளனர்.

இத்தாக்குதலின்போது புலிகளால் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;

- ★ ரி 56 - 1 ரகதுப்பாக்கி - 02
- ★ ரி 56 மகசின் - 02
- ★ வாக்கி - 01
- ★ நடுத்தரரவைகள் - 01

# தளபதிகிட்டுஎப்படி இறந்தார்?

# இந்திய அரசு தரும் விளக்கம்

விடுதலைப் புலிகளின் கப்பல் கடலில் தீப்பிடித்து எரிந்து கடலில் மூழ்கிவிட்டதாக இந்திய இராணுவத் துறை அறிவிப்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவரான கிருஷ்ணகுமார் [கிட்டு] வந்த M P. ஆசாத் எனப்படும் விடுதலைப் புலிகளின் கப்பல் சென்னையிலிருந்து 12 கிலோமீற்றர் தொலைவில் இருந்த போது இந்தக் கப்பலில் தீப்பிடித்ததென்றும், இந்தக் கப்பலை மீட்கத் தாம் முயற்சித்தும் பலனின்றி இக்கப்பல் மூழ்கிப்போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தக் கப்பலில் இருந்த 9 விடுதலைப் புலிகள் போராளிகள் மீட்கப்பட்டார்கள் என்றும், இந்த 9 பேரில் கிட்டு இல்லை என்றும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இக்கப்பலில் வந்த கிட்டுவின் கதி என்ன ஆனது என வெரித்தாஸ் செய்தியாளர் கேட்ட போது கிட்டு கப்பலில் இறந்திருக்கலாம். அதுபற்றி தமக்கு எதுவும் தெரியாது என அவ் அதிகாரி கூறியுள்ளார்.

ஆனால் தம்மால் கப்பலில் இருந்து மீட்கப்பட்ட 9 பேரில் புலிகளின் உயர் அதிகாரி ஜெபச்சந்திரனும் ஒருவர் என அவ் அதிகாரி கூறியுள்ளார்.

முன்னதாக கிட்டு பயணம் செய்த கப்பலை வழிமறித்த இந்தியக் கப்பற்படை அவரைச் சென்னைக்கு கொண்டு வந்து பொலிசாரிடம் ஒப்படைத்ததாக தமிழக பொலிசார் கூறியிருந்தனர், ஆனால் தமிழக பொலிசாரின் தகவல் உண்மையல்ல என இராணுவத்துறை அறிவிப்பாளர் கூறினார்.

விடுதலைப் புலிப் போராளிகள் இருபது பேர் பயணம் செய்த கப்பலை சென்னைக்குச் சமீபமாக இந்தியக் கடற்படையினர் நிறுத்தியிருந்தனர் ஆனால் அக்கப்பலுக்குள் கடற்படையினர் எவரும் பிரவேசிக்கவில்லை'' இவ்வாறு இந்தியப் பாதுகாப்பு அமைச்சகப் பேச்சாளர் ஒருவர் பி.பி.ஸி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

### சர்வதேச

கடந்த புதன்கிழமை இரவு கைப்பற்றப்பட்ட கப்பலை நேற்றுக்காலை இந்திய கடற்பரப்பில் வைத்து கைது செய்ததாகத் தெரிவிக்கின்றமையும் இந்தியா இந்த விவகாரத்தில் உண்மைகளை வெளியிடவில்லை என்பதையே நிரூபிப்பதாகவும் கருதப்படுகிறது.

## புயல்பருத்த மாதிரி விழி மூடினாய்

தளராத துணிவோடு களமாடினாய் - இன்று
தமிழீழ நினைவோடு படகேறினாய்
அழகான திருமேனி தணலானதோ? - இந்தி
அதிகாரம் உனக்கிங்கு எமனானதோ?

நீ நடந்த பாதையெங்கும் பூ மலர்ந்தது - தமிழ்
ஈழமெங்கும் உந்தனது பேரலந்தது.
தாயகத்துப் போர்க்களத்தில் நீ முழங்கினாய் - தம்பி
தானையிலே தளபதியாய் நீ விளங்கினாய்.

அமைதி கேடி வந்த புறா சிறகிழந்தது - கொடும்
அரக்கர்களின் அம்பு பட்டுத் துடி துடித்தது.
இமய நாடு உந்தனுக்குக் குழி பறித்தது - உன்னை
இழந்ததினால் எங்கள் நெஞ்சு பதை பதைக்குது

சிங்களத்துப் படைகளோடு போராடினாய் - வந்த
இந்தியர்களோடும் அன்று வாதாடினாய்
பொங்குகின்ற புலிகளுக்கு வழிகாட்டினாய் - இன்று
புயல்படுத்த மாதிரியாய் விழி மூடினாய்.

பாசத்தோடு ஈழமக்கள் நெஞ்சையாளுவாய் - பிர
பாகரனின் தம்பியாகி என்றும் வாழுவாய்.
ஆசையோடு தேசம் காண வந்த வீரனே! - கிட்டு
அண்ணனென்ற பேரெடுத்த எங்கள் தேவனே!

- புதுவை இரத்தினதுரை

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.